# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/எண்.29,தேதி 18.11.2016.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் – தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் பண வசூல் செய்தல் – 12.11.2016 முதல் 14.11.2016 வரை இரட்டிப்பு ஊதியம் – பிரிவுப் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்களுக்கு – வழங்க வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: கு.எண்.CFC/Rev./FC/Rev./F.Collection/(2)/D744/2016,Dt.11.11.2016.

பார்வையில் கண்டுள்ள குறிப்பாணையின்படி, புழக்கத்திலிருந்து மத்திய அரசால் நீக்கப்பட்ட ரூ.500/– மற்றும் ரூ.1000/– நோட்டுகளை தாழ்வழுத்த மின்பயனீட்டாளர்களிடமிருந்து மின்சார வாரியம் பெற்றுக்கொள்ள 12.11.2016 மற்றும் 13.11.2016 ஆகிய விடுமுறை நாட்களில் அலுவலகப் பணி செய்திட வாரியம் உத்தரவிட்டிருந்தது.

இப்பணியில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு இரட்டிப்பு ஊதியம், உணவு மற்றும் குறுந்தீனி வழங்கிட இவ்வுத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்பணியாளர்கள் பணிபுரியும் நாட்களில் உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் முதல் நிலை ஆகிய விநியோக பகுதி பொறியாளர்களும் அலுவலகத்தில் இருந்து பணப்பாதுகாப்பு வழங்கிட இவ்வுத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பொறியாளர்களுக்கு, பணியாளர்களுக்கு வழங்கிய இரட்டிப்பு ஊதியம், உணவு மற்றும் குறுந்தீனி வழங்குவதற்கு குறிப்பிடப்படாமல் உள்ளதால், இவை பொறியாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

வரலாறு காணாத மழை வெள்ளத்தில் பணியாற்றி நுகர்வோருக்கு விரைந்து மின்சாரம் வழங்கி, மின்வாரியத்திற்கு பெருமையை சேர்த்திட்ட பொறியாளர்களுக்கு மும்மடங்கு ஊதியம் ஏற்கனவே வழங்கப்பட்டதை நன்றியுடன் நினைவுபடுத்துகிறோம். அதுபோன்றே, 12.11.2016 மற்றும் 13.11.2016 ஆகிய தேதிகளில் பணியாளர்களுக்கு வழங்கிய இரட்டிப்பு ஊதியம் உள்ளிட்ட சலுகைகளை உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு வழங்கிட வாரியத்தலைவர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,

18/11/16

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

நகல்

இயக்குனர் / விநியோகம் / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
இயக்குனர் / நிதி / த.மி.உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.